# ஈஸா (அலை) அவர்கள் நபியவர்களுடனா அடக்கப்படுவார்கள்?

✍ எம். அஹ்மத் (அப்பாஸி)

ஈஸா (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறைத்தூதர். இஸ்ரவேலின் சந்ததியினருக்கு நபி மூஸா (அலை) மூலம் அருளப்பட்ட தௌராத் வேதத்தைப் பூரணப்படுத்துவதற்காக ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதம் வழங்கப்பட்டது. அல்குர்ஆனில் நபி ஈஸா (அலை) அவர்களின் பெயர் 34 தடவைகளும், தாயார் மர்யம் (அலை) அவர்களின் பெயர் 11 தடவைகளும் இடம்பெற்றுள்ளன.

அல்லாஹ் தனது வல்லமையைப் பறைசாற்றும் விதத்தில் நபி ஈஸா (அலை) அவர்களை தந்தையில்லாமல் தாயின் மூலம் படைத்தான். அவர்களின் பிறப்பை வைத்தே பனூ இஸ்ரவேலர்கள் இரு வேறு கூட்டங்களாகப் பிரிந்து சென்றார்கள். தந்தையில்லாமல் பிறந்த ஈஸாவின் தந்தை அல்லாஹ்தான் என்பதாக நிகரில்லா அல்லாஹ்விற்கு இணை கற்பித்தார்கள் ஒரு கூட்டத்தினர். அவர்கள்தான் பிற்காலத்தில் கிறிஸ்தவர் களாக அறியப்பட்டனர். மறுபுறத்தில் தந்தையில்லாமல் ஈஸா தவறான முறையில் பிறந்தவர் என்று யூதர்கள் கூற ஆரம்பித்தனர். இவ்வாறு நபிமார்களுக்கும் நல்லடியார்களுக்கும் விபச்சாரப் பட்டம் சுமத்துவது யூதர்களுக்கெல்லாம் ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே நபி தவூத் (அலை) அவர்களுக்கும் இவ்வாறு குற்றம் சுமத்தினார்கள். அதனால்தான் இவர்கள் இருவரின் நாவினாலும் யூதர்கள் சபிக்கப்பட்டதாக அல்குர்ஆனில் ஸூரா மாஇதாஃ 78ம் வசனம் கூறுகின்றது.

இவ்வாறு எதிர்த்து வந்த யூதர்கள் ஒரு கட்டத்தில் நபி ஈஸாவைக் கொலை செய்ய முனைந்தனர். அவர்களிடமிருந்து நபி ஈஸைவைக் காக்கும் பொருட்டு அல்லாஹ் அவர்களை வானின் பக்கம் உயர்த்தி விட்டான். இதுபற்றி இறைவன் திருமறையில் ஸூரா ஆல இம்ரான் 55ம் வசனத்திலும், ஸூரா நிஸாஃ 156-158 ஆகிய வசனங்களிலும் கூறியுள்ளான்.

உயர்த்தப்பட்ட நபி ஈஸா (அலை) அவர்கள் மறுமை நெருங்கும் போது மீண்டும் இப்பூமிக்கு இறங்குவார்களென்பது அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்று. (பார்க்க : புஹாரி 3448, 3449, முஸ்லிம் 155, 156). இவ்வாறு இறங்கும் ஈஸா (அலை), அவரை வணங்குவதற்காக சித்தரித்து வைக்கப்பட்டிருக்கும்

சிலுவைகளை உடைப்பார்கள். பன்றிகளைக் கொல்வார்கள். வரிப் பணத்தை ரத்துச் செய்வார்கள். தஜ்ஜாலைக் கொல்வார்கள். மேலும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சமூகத்தில் நபியாக அல்லாமல் ஒரு தலைவராக மக்களை வழிநடத்திச் சென்று ஜிஹாத் புரிவார்கள். இறுதியாக இந்த உம்மத்தில் ஒருவராகவே மரணிப்பார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்கள் மரணித்தால் எங்கு அடக்கம் செய்யப்படு வார்கள்? என்பதில் கருத்துவேறுபாடுள்ளது. அது பற்றி ஒரு சில நபிமொழி கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் அந்த செய்திகளின் படித் தரங்களை ஆராய்ந்து ஈஸா (அலை) அவர்கள் எங்கு அடக்கம் செய்யப்படு வார்கள்? என்பதை அறிய முயற்சிப்போம்.

### 1. அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் செய்தி :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : **மர்யமின் புதல்வர் ஈஸா பூமிக்கு இறங்குவார். திருமணம் செய்து பிள்ளைகளும் கிடைக்கும், நாற்பத்தைந்து வருடங்கள் தங்குவார்கள். பின்பு மரணித்து என்னுடன் எனது மண்ணறையில் அடக்கம் செய்யப்படுவார்கள். அபூ பக்ருக்கும் உமருக்கும் இடையில் நானும் ஈஸாவும் ஒன்றாகவே எழுவோம்.** இச்செய்தியை இமாம் இப்னுல் ஜௌஸீ தனது "அல்வபா பிதஃரீபில் முஸ்தபா" (2/ 574) எனும் நூலும், "அல்இலலுல் முதனாஹியா" (1529) எனும் நூலிலும் பதிவு செய்துள்ளார்கள். இச்செய்தி மிகவும் பலவீனமானது. இதன் அறிவிப்பளர் வரிசையில் இடம்பெறும் அபூ அப்திர் ரஹ்மான் யாரென இனங்காணப் படாதவர், அப்துர் ரஹ்மான் இப்னு ஸியாத் இப்னு அன்உம் என்பவர் பலவீனமானவர். இதனால்தான் இச்செய்தியைப் பதிந்த இப்னுல் ஜௌஸீ உட்பட இமாம் தஹபீ, அல்பானீ போன்றோர் பலவீனமானதெனக் கூறியுள்ளனர். (மீஸானுல் இஃதிதால் 2/ 562, 563 , அஸ்ஸில்ஸிலா அழ்ழஈபா 6562).

### 2. ஆஇஷா (ரலி) அவர்களின் செய்தி :

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் : **அல்லாஹ் வின் தூதரே! உங்களுக்குப் பின்னாலும் நான் வாழுவேன் என்று நினைக்கிறேன், உங்களுக்குப் பக்கத்திலேயே நான் அடக்கம் செய்யப்பட அனுமதி தருவீர்களா? என்று வினவினார்கள். அதற்கு நபியவர்கள் அவ்விடத்தில் எனக்கு எங்கே உரிமை இருக்கிறது?, அங்கே எனதும், அபூபக்ர், உமர், மர்யமின் புதல்வர் ஈஸா ஆகியோரினதும் சமாதிகளுக்கான இடங்களைத் தவிர வேறு இடமில்லையே என்று பதிலளித்தார்கள்.** இச்செய்தியை ஹாபிழ் இப்னு அஸாகிர் தனது தாரீகு

திமஷ்க் (47/ 522) எனும் நூலில் பதிந்துள்ளார்கள். இச்செய்தி அறிவிப்பாளர் வரிசை அடிப்படையில் மிகவும் பலவீனமாக இருப்பதுடன் வேறொரு பலமான செய்தியுடனும் முரண்படுகின்றது. இதன் அறிவிப்பாளர் வரிசையில் உள்ள அஹ்வஸ் இப்னுல் முபழ்ழல் தவறு விடக் கூடியவரென விமர்சனத்திற்குள்ளானவர், முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் இப்னு உமர் அல்உமரீ என்பவர் மிகவும் பலவீனமானவர், ஸாலிஹ் பின் ஷுஐப் யாரென அடையாளம் காணப்படாதவர். இதன் மற்றுமொரு அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் ஷுஐப் பின் தல்ஹா என்பவர் பலவீனமானவர் என்பதுடன் தனது ஆசானாகக் கூறியிருக்கும் அபூபக்ர் என்பவரை சந்திக்கவுமில்லை. இது போன்ற பல குறைகளைக் கொண்ட இவ்வறிவிப்பாளர் வரிசை மிகவும் பலவீனமானது. (தாரீகு பஃதாத் 3508, மீஸானுல் இஃதிதால் 676, 7812, லிஸானுல் மீஸான் 922).
மேலும் இச்செய்தி இதனைவிட வலுவான ஒரு செய்திக்கு முரண்படுகின்றது. புஹாரியில் (3700) உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப் பட்ட செய்தி இடம்பெறும் போது, அதில் ஆஇஷா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்), அபூபக்ர் (ரலி) ஆகியோருக்குப் பக்கத்தில் அடக்கம் செய்யப்பட அனுமதி கேட்ட நேரத்தில் "அவ்விடத்தை எனக்காகத் தெரிவு செய்து வைத்திருந்தேன், எனினும் இன்றைய தினம் என்னை விட அவ்விடத்திற்கு அவரைத் தெரிவு செய்து விட்டுக் கொடுக்கின்றேன்" என்றார்கள். இங்கு இரண்டு செய்திகளைக் கவனிக்க வேண்டும் :

1. நபி (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறியிருந்தால் உமர் (ரலி) அவர்கள் அனுமதி கேட்ட நேரத்தில் ஆஇஷா (ரலி) அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பார்கள். அவ்வாறெதுவும் கூறவில்லை.
2. உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட அன்றைய தினம்தான் ஆஇஷா (ரலி) அவர்கள் தனது முடிவை மாற்றியதாக இதில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட நபிமொழியின் பிரகாரம் நபியவர்கள் ஏற்கனவே அபூபக்ர், உமர், மர்யமின் புதல்வர் ஈஸா ஆகியோரினதும் சமாதிகளுக்கான இடங்களைத் தவிர வேறு இடமில்லையே என்று கூறியிருந்தால் "இன்றைய தினம் என்னை விட அவ்விடத்திற்கு அவரைத் தெரிவு செய்து விட்டுக் கொடுக்கின்றேன்" என்று ஆஇஷா (ரலி) அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள்.

எனவே மேற்கூறப்பட்ட காரணங்களினால் அறிவிப்பாளர் வரிசை, கருப் பொருள் இரு அடிப்படைகளிலும் இச்செய்தி பலவீனமானது.

### 3. அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்களின் செய்தி :

அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : தௌராத்தில் முஹம்மத் (ஸல்) அவர்களது வர்ணனைகள் எழுதப்பட்டுள்ளன. நபி ஈஸா (அலை) அவர்கள் நபியவர்களுடன்தான் அடக்கம் செய்யப்படுவார்கள் என்றும் உள்ளது. அதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூ மௌதூத் அல்மதனீ என்பவர் நபியவர்களின் வீட்டில் ஒரு மண்ணறைக்கான இடம் மீதமுள்ளது என்று கூறினார்கள்.

இச்செய்தியை இமாம் திர்மிதீ தனது ஸுனனிலும் (3617), நுஐம் பின் ஹம்மாத் தனது அல்பிதன் எனும் நூலிலும் (1621), இப்னு அஸாகிர் தனது தாரீகு திமஷ்க்கிலும் (47/523) பதிவு செய்துள்ளார்கள்.

இந்தச் செய்தியில் சில விடயங்கள் நாம் கவனிக்க வேண்டியவையாகும் :

1. இச்செய்தி நபியவர்கள் கூறியதல்ல. மாறாக அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் தௌராத்தில் கண்டதாகக் கூறியது. மேற்கண்ட நபித்தோழர் யூத மதத்தில் மதகுருவாக இருந்துவிட்டு இஸ்லாத்தில் நுழைந்தவராவார்.

2. ஒரு நபித்தோழர் அறிவிக்கும் செய்தி ஆய்வுக்குட்படுத்த (இஜ்திஹாத்) முடியாத மறைவான அறிவுடன் தொடர்பான விடயமாக இருந்தால் அதனை அறிவிப்பாளர் வரிசையும் வலுவாக இருந்து, அந்நபித்தோழர் வேதக்காரர்களிடமிருந்து தகவல் எடுக்காதவரென உறுதியானால் அச்செய்தியை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் இந்நபித்தோழர் வேதக்காரர்களிடமிருந்து செய்தி எடுப்பவரென அறியப்பட்டவர். எனவே இது அவ்வாறான இஸ்ராயிலிய்யத்தான செய்திகளில் ஒன்றாகவே பார்க்கப்படும்.

3. இதன் அறிவிப்பாளர் வரிசையில் வரும் உஸ்மான் பின் ழஹ்ஹாக் எனும் பெயரில் இருவர் உள்ளனர். ஒருவர் பலவீனமானவர், மற்றவர் யாரென இனங்காணப்படாதவர். மேலும் இந்நபிமொழியில் இடம்பெறு பவர் யாரென இனங்காணப்படாதவர்.

எனவே மேற்கண்ட செய்தி அறிவிப்பாளர் வரிசை, கருப்பொருள் ஆகிய இரு அடிப்படைகளிலும் பலவீனமான இஸ்ராயிலிய்யத்தான செய்திகளில் ஒன்றாகும். இச்செய்தியை இமாம்களான புஹாரி, அபூதாவூத், மற்றும் பலர் பலவீனமெனக் கூறியுள்ளனர்.

முடிவுரை :

நபி ஈஸா (அலை) இறுதித்தூதர் (ஸல்) அவர்களுக்கருகில் அடக்கம் செய்யப்படுவது தொடர்பாக மூன்று நபித்தோழர்கள் வாயிலாக செய்திகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை அப்துல்லாஹ் பின் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி), ஆஇஷா (ரலி), அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) ஆகியோரின் செய்திகளாகும். இம்மூன்றும் ஏற்க முடியாத பலவீனமான செய்தி என்பதைச் சுட்டிக் காட்டினோம்.

எனவே நபி ஈஸா (அலை) எங்கு மரணிக்கிறார்களோ அங்கேயே அடக்கம் செய்யப்படுவார்கள். அது நபி (அலை) அவர்களின் மண்ணறைக்கு அருகில்தான் என்று உறுதியாகக் கூறப் போதியளவு சான்றுகள் இல்லை. பொதுவாக நபிமார்கள் மரணித்த இடத்திலேயே அடக்கம் செய்யப் படுவார்கள் எனும் கருத்தில் அபூபக்ர் (ரலி), ஆஇஷா (ரலி) போன்றோரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் சில சர்ச்சைகள் உள்ளதால் திர்மிதீ (1018) போன்றவர்கள் அச்செய்தியை பலவீனமெனக் கூறியுள்ளனர்.

அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன். அவனுக்கே அனைத்துப் புகழும்.